**<u>நகராட்சி அலுவலகம்</u>**
**<u>போடிநாயக்கனூர்</u>**
**<u>நாள்.27.10.2023</u>**

**<u>சாதாரண கூட்ட அழைப்பிதழ்</u>**

2023–ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 06.11.2023–ஆம் தேதி திங்கட்கிழமை காலை 11.00 மணிக்கு கீழ்கண்ட பொருள் பற்றி முடிவு செய்ய போடிநாயக்கனூர் நகர்மன்றத்தின் சாதாரண கூட்டம் நகர்மன்ற கூடத்தில் நடைபெறும். மேற்படி, கூட்டத்தில் தாங்கள் தவறாமல் கலந்து கொள்ள வேண்டுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

***********

**<u>பொருள்கள்</u>**

**பொருள் எண்.1**

இந்நகராட்சி ஆணையாளர் அவர்களின் ஆகஸ்ட் -2023 மற்றும் செப்டம்பர் - 2023 ஆம் மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>** : மன்றம் பதிவு செய்யலாம்

**தீர்மான எண்**: 437 - அலுவலகக்குறிப்பு பதிவு செய்யப்பட்டது.

**பொருள் எண்.2**

இந்நகராட்சி பொறியாளர் அவர்களின் ஆகஸ்ட் -2023 மற்றும் செப்டம்பர் - 2023 ஆம் மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது

**<u>அலுவலகக்குறிப்பு</u>** : மன்றம் பதிவு செய்யலாம்

**தீர்மான எண்**: 438 - பதிவு செய்யப்பட்டது.

**பொருள் எண்.3**

திரு.ஏ.கண்ணன், நகராட்சி நிலையான வழக்கறிஞர், சென்னை உயர்நீதி மன்ற மதுரைகிளை அவர்களின் 04.09.2023 ஆம் தேதிய கடிதத்தில், இந்நகராட்சியில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வயது முதிர்வு காரணமாக ஓய்வு பெற்ற திரு.ரெ.அழகர்சாமி என்பவரால் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தொடரப்பட்ட வழக்கு WP(MD)No:17060 of 2016ல் , எதிர்வாதுரை மற்றும் வக்காலத்து தாக்கல் செய்தமைக்கும், 23.08.2023 மற்றும் 29.08.2023 ஆகிய தேதிகளில் வழக்கில் நகராட்சி சார்பாக ஆஜரானமைக்கும் வழக்குக் கட்டணமாக ரூ.15,000/- வழங்க கோரியுள்ளார்.

மேற்படி தொகையினை நகராட்சி பொது நிதியில் இருந்து வழக்குக் கட்டணமாக வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>** : மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்**: 439 - அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.4**

போடிநாயக்கனூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 21 முதல் 33 வரை பழுதடைந்த சிறுபாலங்களை அகற்றி புதிய சிறுபாலம் அமைக்கும் பணிக்கு 20.09.2023ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டை விட கூடுதல் / குறைவு |
|---|---|---|---|---|
| 1 | போடிநாயக்கனூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 21 முதல் 33 வரை பழுதடைந்த சிறுபாலங்களை அகற்றி புதிய சிறுபாலம் அமைக்கும் பணி | ரூ.10,00,000/– | கே.ஆர்.எம் கன்ஸ்ட்ரக்சன் போடி | 0.20% குறைவு |
| | | | திரு.பி.முத்துப்பாண்டி போடி | 1.68% கூடுதல் |

**<u>அலுவலக குறிப்பு</u> :**

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள கே.ஆர்.எம் கன்ஸ்ட்ரக்சன்,போடி நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலை உத்தரவு வழங்கவும் , பணிகள் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்**: 440 - அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.5**

பேருந்து நிலையத்தில் வடக்கு பக்கத்தில் புதிதாக கட்டப்பட்ட கடைகள் முதல் தளத்திற்கு கூடுதல் படிக்கட்டுகள் அமைக்கும் பணிக்கு 20.09.2023ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டை விட கூடுதல் / குறைவு |
|---|---|---|---|---|

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | பேருந்து நிலையத்தில் வடக்கு பக்கத்தில் புதிதாக கட்டப்பட்ட கடைகள் முதல் தளத்திற்கு கூடுதல் படிக்கட்டுகள் அமைக்கும் பணி | ரூ.6,00,000/– | கே.ஆர்.எம் கன்ஸ்ட்ரக்சன் போடி | 0.24% குறைவு |
| | | | திரு.பி.முத்துப்பாண்டி, போடி | 4.24% கூடுதல் |

**அலுவலக குறிப்பு :**

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள கே.ஆர்.எம் கன்ஸ்ட்ரக்சன், போடி நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலை உத்தரவு வழங்கவும் , பணிகள் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்**: 441 - அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.6**

போடிநாயக்கனூர் நகராட்சி பகுதியில் பாதாள சாக்கடை திட்டத்தில் இணைப்பு இல்லாத வீடுகளுக்கு முதற்கட்டமாக Internal Plumbing முறையில் சுமார் 300 இணைப்பு வழங்கும் பணிக்கு 20.09.2023ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டை விட கூடுதல் / குறைவு |
|---|---|---|---|---|
| 1 | போடிநாயக்கனூர் நகராட்சி பகுதியில் பாதாள சாக்கடை திட்டத்தில் இணைப்பு இல்லாத வீடுகளுக்கு முதற்கட்டமாக Internal Plumbing முறையில் சுமார் 300 இணைப்பு வழங்கும் பணி | ரூ.15,00,000/– | திரு.D.ஞானவேல் ஒப்பந்ததாரர் போடி | 0.02% குறைவு |
| | | | திரு.L.எல்லப்பன் ஒப்பந்ததாரர் போடி | 1.26% கூடுதல் |

**அலுவலக குறிப்பு :**

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திரு.D.ஞானவேல், ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலை உத்தரவு வழங்கவும் , பணிகள் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்**: 442 - அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.7**

போடிநாயக்கனூர் நகராட்சி பாதாள சாக்கடை திட்டத்தில் சாலை காளியம்மன் கோவில் அருகில் உள்ள கழிவு நீர் உந்து நிலையத்தில் உள்ள 50 HP நீர்மூழ்கி மோட்டார் பேனல் போர்டு மற்றும் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலைய வளாகத்தில் உள்ள கழிவு நீர் உந்து நிலையத்தில் உள்ள ஒரு 30 HP நீர்மூழ்கி மோட்டார் பழுது சரிசெய்யும் பணிக்கு 20.09.2023ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டை விட கூடுதல் / குறைவு |
|---|---|---|---|---|
| 1 | போடிநாயக்கனூர் நகராட்சி பாதாள சாக்கடை திட்டத்தில் சாலை காளியம்மன் கோவில் அருகில் உள்ள கழிவு நீர் உந்து நிலையத்தில் உள்ள 50 HP நீர்மூழ்கி மோட்டார் பேனல் போர்டு மற்றும் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலைய வளாகத்தில் உள்ள கழிவு நீர் உந்து நிலையத்தில் உள்ள ஒரு 30 HP நீர்மூழ்கி மோட்டார் பழுது சரிசெய்யும் பணி | ரூ.2,45,000/— | திரு.M.வைகுண்டம், தேனி | 0.29% குறைவு |
| | | | திரு.L.எல்லப்பன் ஒப்பந்ததாரர் போடி | 3.41% கூடுதல் |

<u>அலுவலக குறிப்பு</u> :

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திரு.M.வைகுண்டம், தேனி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலை உத்தரவு வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்**: 443 - அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.8**

போடிநாயக்கனூர் நகராட்சி பாதாள சாக்கடை திட்டத்தில் உள்ள இரண்டு கழிவுநீர் உந்து நிலையங்கள் மற்றும் கழிவுநீர் குழாய்கள் பராமரிப்பு பணிகள் செய்ய போதிய நிரந்தர பணியாளர்கள் இல்லாததால் ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்களை 6 மாத காலத்திற்கு (01.10.2023 முதல் 31.03.2024 வரை) தனியார் மூலம் ஆட்கள் விநியோகம் செய்யும் பணி மேற்கொள்ள அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி 22.09.2023ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ.எ | வேலையின் பெயர் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை |
|---|---|---|---|---|

| ண். | | | பெயர் | விட கூடுதல் / குறைவு |
|---|---|---|---|---|
| 1 | போடிநாயக்கனூர் நகராட்சி பாதாள சாக்கடை திட்டத்தில் உள்ள இரண்டு கழிவுநீர் உந்து நிலையங்கள் மற்றும் கழிவுநீர் குழாய்கள் பராமரிப்பு பணிகள் செய்ய ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்களை 6 மாத காலத்திற்கு (01.10.2023 முதல் 31.03.2024 வரை) தனியார் மூலம் ஆட்கள் விநியோகம் செய்யும் பணி | ரூ.11,00,000/– | திரு.T.தவமணி, ஒப்பந்ததாரர் போடி | 0.27% குறைவு |
| | | | L.எல்லப்பன் ஒப்பந்ததாரர் போடி | 0.17% கூடுதல் |

**அலுவலக குறிப்பு :**

1.அவசர அவசியம் கருதி மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி ஒப்பந்தபுள்ளி கோரியமைக்கும், மதிப்பீட்டு தொகை ரூ.11,00,000/– ஐ நகராட்சி குடிநீர்நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

2.வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திரு.T.தவமணி, போடி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலை உத்தரவு வழங்கவும் , பணிகள் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்**: 444 - அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.9**

போடிநாயக்கனூர் நகராட்சி பாதாள சாக்கடை திட்டத்தில் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலைய பராமரிப்பு பணிகள் செய்ய ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்களை 6 மாத காலத்திற்கு (01.10.2023 முதல் 31.03.2024 வரை) தனியார் மூலம் ஆட்கள் விநியோகம் செய்யும் பணி மேற்கொள்ள அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று 29.09.2023ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டை விட கூடுதல் / குறைவு |
|---|---|---|---|---|
| 1 | போடிநாயக்கனூர் நகராட்சி பாதாள சாக்கடை திட்டத்தில் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலைய பராமரிப்பு பணிகள் செய்ய ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்களை 6 மாத காலத்திற்கு (01.10.2023 முதல் 31.03.2024 வரை) தனியார் மூலம் ஆட்கள் விநியோகம் செய்யும் பணி | ரூ.15,00,000/– | திரு.T.தவமணி, ஒப்பந்ததாரர் போடி | (-)0.26% குறைவு |
| | | | திரு.L.எல்லப்பன் ஒப்பந்ததாரர் போடி | 0.21% கூடுதல் |

**அலுவலக குறிப்பு :**

1.அவசர அவசியம் கருதி மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி ஒப்பந்தபுள்ளி கோரியமைக்கும், மதிப்பீட்டு தொகை ரூ.15,00,000/– ஐ நகராட்சி குடிநீர்நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

2.வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திரு.T.தவமணி, ஓப்பந்தகாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலை உத்தரவு வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்**: 445 - அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.10**

போடிநாயக்கனூர் நகராட்சி வார்டு எண்–1,3,5 மற்றும் 11 ஆகிய வார்டுகளில் தலா ஒரு ஆழ்துளை கிணறு அமைத்து சிறுமின்விசைப்பம்பு அமைக்கும் பணிக்கு 20.09.2023ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது

| வ.எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டை விட கூடுதல் / குறைவு |
|---|---|---|---|---|
| 1 | போடிநாயக்கனூர் நகராட்சி வார்டு எண்–1,3,5 மற்றும் 11 ஆகிய வார்டுகளில் தலா ஒரு ஆழ்துளை கிணறு அமைத்து சிறுமின்விசைப்பம்பு அமைக்கும் பணி | ரூ.10,00,000/– | திரு. P.நடராஜன், ஒப்பந்ததாரர் , போடிநாயக்கனூர். | 0.08% குறைவு |
| | | | திரு. L.எல்லப்பன், ஒப்பந்ததாரர் , போடிநாயக்கனூர். | 0.6% கூடுதல் |

**அலுவலக குறிப்பு :**

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திரு. P.நடராஜன், ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலை உத்தரவு வழங்கவும் , பணிகள் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்**: 446 - அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.11**

போடிநாயக்கனூர் நகராட்சியில் வார்டு – 2 சேக் பீரணன் தெரு , வார்டு – 14 சுப்பிரமணியர் கோவில் வடக்கு தெரு , வார்டு – 17 –கிழக்கு வெளி வீதி , வார்டு – 20 சண்முக

சுந்தரம் தெரு எண்–11, ஆகிய நான்கு இடங்களில் ஆழ்துளை கிணறு அமைத்து சிறுமின்விசைப்பம்பு அமைக்கும் பணிக்கு 20.09.2023ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டை விட கூடுதல் / குறைவு |
|---|---|---|---|---|
| 1 | **போடிநாயக்கனூர் நகராட்சியில் வார்டு–2– சேக் பீரணன் தெரு , வார்டு எண்–14–சுப்பிரமணியார் கோவில் வடக்கு தெரு , வார்டு எண்–17–கிழக்கு வெளி வீதி ,வார்டு எண்–20– சண்முக சுந்தரம் தெரு எண்–11, ஆகிய நான்கு இடங்களில் ஆழ்துளை கிணறு அமைத்து சிறுமின்விசைப்பம்பு கட்டும் பணி** | **ரூ.10,00,000/–** | திரு. P.நடராஜன், ஒப்பந்ததாரர் , போடிநாயக்கனூர். | 0.07% குறைவு |
| | | | திரு. L.எல்லப்பன், ஒப்பந்ததாரர் , போடிநாயக்கனூர். | 0.61% கூடுதல் |

**<u>அலுவலக குறிப்பு</u> :**

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திரு. P.நடராஜன், ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலை உத்தரவு வழங்கவும் , பணிகள் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்**: 447 - அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.12**

போடிநாயக்கனூர் நகராட்சி குடிநீர் திட்டப்பணிகளை பராமரிக்க தனியார் மூலம் பணியாட்கள் 16 நபர்களை 4 மாதத்திற்கு நியமித்து பணி செய்திட நகர்மன்றத்தில் ஒப்புதல் பெறப்பட்டு 07.09.2023ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டை விட கூடுதல் / குறைவு |
|---|---|---|---|---|
| 1 | போடிநாயக்கனூர் நகராட்சி குடிநீர் திட்டப்பணிகளை பராமரிக்க தனியார் மூலம் பணியாட்கள் 16 நபர்களை | ரூ.15,60,000/– | திரு.T.தவமணி, ஒப்பந்ததாரர் போடி | 0.0003% குறைவு |

| | | | | |
|---|---|---|---|---|
| | 4 மாதத்திற்கு நியமித்து பணி செய்தல் | | KSPஎலக்ட்ரிக்கல்ஸ் தேனி | 0.02% கூடுதல் |

**அலுவலக குறிப்பு :**

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திரு.T.தவமணி, போடி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்**: 448 - அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.13**

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் அரசாணை எண் 145 நாள் 14.10.2022–ல் உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள தெரு விளக்குகளை ஆற்றல்மிகு (LED) தெரு விளக்குகளாக மாற்றுவதற்கு உரிய அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. அதன் பொருட்டு போடிநாயக்கனூர் நகராட்சி பகுதியில் உள்ள 2626 தெரு விளக்குகளை (LED)விளக்குகளாக மாற்றம் செய்வதற்கு ரூ.244.01 இலட்சம் மதிப்பீட்டில் உரிய திட்டகருத்துருவினை சமர்ப்பிக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும் இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்கு அதற்கான நிதி ஆதாரத்தினை TUFIDCO நிறுவனத்தின் மூலம் கடனாக பெற்றுக்கொள்ளவும். அக்கடன் தொகையினை 6 ஆண்டுகளில் 5% வட்டி தொகையுடன் திரும்ப செலுத்திடவும் அரசாணையில் அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன்படி போடிநாயக்கனூர் நகராட்சி பகுதியில் உள்ள 2626 தெரு விளக்குகளை ஆற்றல்மிகு (LED) விளக்குகளாக மாற்றம் செய்வதற்கு ரூ.244.01 இலட்சம் மதிப்பீட்டில் உரிய திட்ட கருத்துருவினை சமர்ப்பிக்க மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. போடிநாயக்கனூர் நகராட்சி பகுதியில் உள்ள 2626 தெரு விளக்குகளை ஆற்றல்மிகு (LED) விளக்குகளாக மாற்றம் செய்வதற்கு ரூ.244.01 இலட்சம் மதிப்பீட்டில் உரிய திட்ட கருத்துருவினை சமர்ப்பிக்க மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட திட்டத்தினை செயல்படுத்த TUFIDCO நிறுவனத்தின் மூலம் கடனாக பெற்றுக்கொள்ளவும். அக்கடன் தொகையினை 6 ஆண்டுகளில் 5% வட்டி தொகையுடன் திரும்ப செலுத்திடவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.
3. திட்டப்பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று உரிய திட்ட கருத்துருவினை நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கு சமர்பித்தமைக்கு மன்றம் அனுமதித்து அங்கீகரிக்கலாம்.

**தீர்மான எண்**: 449 - அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.14**

போடிநாயக்கனூர் நகராட்சிக்கு சொந்தமான தலைமை நீரேற்று நிலையத்தில் சுத்திகரிப்பு செய்து விநியோகம் செய்யப்படும் குடிநீரில் கலப்பதற்கு தேவையான குளோரின் சிலிண்டர் ஓராண்டு உபயோகத்திற்கு வாங்குவதற்கான உத்தேச மதிப்பீடு ரூ.4.00/– லட்சத்தினை இந்நகராட்சி குடிநீர் வழங்கல் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :–** மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்**: 450 - அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.15**

போடிநாயக்கனூர் நகராட்சிக்கு சொந்தமான தலைமை நீரேற்று நிலையத்தில் குடிநீர் சுத்திகரிப்பு செய்வதற்கு பயன்படுத்தபடும் குளோரின் சிலிண்டர் கையிருப்பு இல்லாத காரணத்தினால் குடிநீர் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று ஸ்ரீ சத்யா டைஸ் கெமிக்கல்ஸ் நிறுவனத்தில் நகர்மன்றத்தால் 12.08.2022ம் தேதி அங்கீகரிக்கப்பட்ட விலை விகிதத்தில் 4 சிலிண்டர் கொள்முதல் செய்தமைக்கும் அதற்கான செலவினத்தொகை ரூ.1,19,920/–னை இந்நகராட்சி குடிநீர் வழங்கல் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :–** மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்**: 451 - அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.16**

போடிநாயக்கனூர் நகராட்சி அலுவலகத்தில் அனைத்து பிரிவுகளிலும் பயன்படுத்தப்படும் RICOH MP 2001L Xerox printer –10 எண்ணம் மிகவும் பழுதடைந்து பணி மேற்கொள்ளபடாத நிலையில் உள்ளதால் பழுது நீக்கம் செய்து வழங்கவும், Service Support ஒரு வருட காலத்திற்கு வழங்கும் பணிக்கு 18.10.2023ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டை விட கூடுதல் / குறைவு |
|---|---|---|---|---|
| 1 | போடிநாயக்கனூர் நகராட்சி அலுவலகத்தில் அனைத்து பிரிவுகளிலும் பயன்படுத்தப்படும் RICOH MP 2001L Xerox printer –10 எண்ணம் மிகவும் பழுதடைந்து பணி மேற்கொள்ளபடாத நிலையில் உள்ளதால் பழுது நீக்கம் செய்து வழங்கவும், Service Support ஒரு வருட காலத்திற்கு வழங்கும் பணி | ரூ.1,30,000/– | Star Office Solution, Uthamapalayam | 1,28,300/– |
| | | | Omega Office Solution, Madurai | 1,31,100/– |

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

1.அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று ஒப்பந்துபுள்ளி கோரியமைக்கும், மதிப்பீட்டு தொகை ரூ.1,30,000/–னை நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

2.வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள Star Office Solution,Uthamapalayam ஒப்பந்த நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலை உத்தரவு வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்**: 452 - அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.17**

போடிநாயக்கனூர் நகராட்சி வார்டு எண்.2, மயானகரை ரஸ்தாவில்அமைந்துள்ள 12.08 MLD கொள்ளளவு கொண்ட கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் ஆன்லைன் வழி தொடர்ச்சியான கழிவுநீர் கண்காணிப்பு அமைப்பு (Online Continious Effluent Monitoring System) inlet pipeline -ல் RLT Meter பொருத்திடவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.2.75/–இலட்சத்தினை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மான எண்**: 453 - அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.18**

போடிநாயக்கனூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட சர்வே வார்டு எண்.IV, பிளாக்.6, நகரளவு எண்.815/1, 2-இல் மயானம் என்பதனை திறந்த வெளியிடத்தில்

எரியூட்டுவதற்கு எதிராக திரு.சுருளிவேல் என்பவர் சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் வழக்கு எண்.W.P.(MD)No. 10495/2023 இல் 3-ஆம் பிரதிவாதியாக நகராட்சி ஆணையாளரை சேர்த்து வழக்கு தொடந்துள்ளார். மேற்படி வழக்கில் நகராட்சி ஆணையாளர் சார்பாக திரு.A.கண்ணன் அவர்கள் 28.04,2023-ஆம் தேதியன்று வழக்கிற்கு ஆஜராகி அவ்வழக்கானது தள்ளுபடி செய்து உத்தரவிடப்பட்டது, எனவே, அவ்வழக்கை நடத்தி வந்த வழக்கறிஞர் அவர்களுக்கு வழக்கு கட்டணமாக ரூ. 10,000/-ஐ வழங்க கோரியுள்ளார். எனவே மேற்படி செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து செலவினம்மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>:** மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்**: 454 - அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.19**

இந்நகராட்சியில் பணிபுரியும் தூய்மை பணியாளர் சின்னமுத்து/மணிகண்டன் என்பவருக்கு இரு சக்கர வாகனம் வாங்குவதற்க்கு முன்பணம் ரூ. 50,000/- வழங்ககோரி விண்ணபம் அளித்துள்ளார், வாகனத்திற்க்கு முன்பணம் வழங்குவது இதுவே முதல் முறையாகும் எனவே அன்னாருக்கு இருசக்கர வாகனம் முன்பணம் பொது நிதியில் இருந்து வழங்க மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>:** மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்**: 455 - அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.20**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட அனைத்து வார்டுகளிலும் உள்ள சொத்துகளில் வரிவிதிக்கப்பட்ட சொத்துகளின் விவரங்கள் வார்டு எண், கதவு எண், தெரு பெயர், சொத்துவரிவிதிப்பு எண், குழாய் இணைப்பு எண், பாதாளசாக்கடை இணைப்பு எண் ஆகியவற்றினை எளிதில் அறியும் வண்ணமும் வரி இனங்களுக்கான தொகையினை QR code (க்யு ஆர் குறியூடு) செய்து இணையதளம் மூலம் பணம் செலுத்தும் வசதியுடன் கூடிய Sticker தயார் செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.6,60,000/-க்கு மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது

**<u>அலுவலகக்குறிப்பு</u>** : மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மான எண்**: 456 - அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.21**

இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் டெங்கு காய்ச்சலைக் கட்டுப்படுத்திட பயன்படுத்தப்படும் நிலவேம்புபவுடர் இருப்பு இல்லாத காரணத்தினால் எதிர்வரும் பருவ மழைக்காலங்களில் காய்ச்சலால் பாதிக்கப்படுபவர்களுக்கு நில வேம்பு குடிநீர் வழங்க 300 கிலோ நிலவேம்பு பவுடர் பொதுசுகாதார முக்கியத்துவம் கருதி கொள்முதல் செய்யவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ 4.20/- இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது

**<u>அலுவலகக்குறிப்பு</u>**: மன்றம் அனுமதிக்கலாம்

1) ஒப்புதல் அளிக்கலாம்

2)மேற்காணும் செலவினம் பொதுநிதியின் கீழ் மேற்கொள்ளலாம்

**தீர்மான எண்**: 457 - அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.22**

இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் டெங்கு நோய்த்தடுப்பு பணிகளுக்காக பயன்படுத்தி வரும் கிருமி நாசினிகளான அபேட் 300லிட்டர் பைரேத்திரம் 300 லிட்டர் பொதுசுகாதர முக்கியத்துவம் கருதி கொள்முதல் செய்யவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ 5.50/ இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது

**<u>அலுவலகக்குறிப்பு</u>**: மன்றம் அனுமதிக்கலாம்

1) ஒப்புதல் அளிக்கலாம்

2)மேற்காணும் செலவினம் பொதுநிதியின் கீழ் மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண்**: 458 - அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.23**

இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் டெங்கு நோய்த்தடுப்பு பணிகளுக்காக பயன்படுத்தி வரும் கிருமி நாசினிகளான டெக்னிக்கல் மாலத்தியான் 300லிட்டர் பொதுசுகாதார முக்கியத்துவம் கருதி கொள்முதல் செய்யவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ 3.25/ இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது

**<u>அலுவலகக்குறிப்பு</u>**:

1)மேற்காணும் செலவினம் பொதுநிதியின் கீழ் மேற்கொள்ளலாம்

**தீர்மான எண்**: 459 - அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.24**

இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் டெங்கு நோய்த்தடுப்பு பணிகளுக்காக60 DBC பணியாளர்கள் ஈடுபடுத்தப்படுவதற்கு கடந்த 22.09.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. வரப்பெற்ற

ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்புநோக்கு செய்து மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்தாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை (ரூ) | ஒப்பந்தப்புள்ளி கோரிய தொகை (ரூ) | மதிப்பீட்டை விட கூடுதல் குறைவு |
|---|---|---|---|---|
| 1 | M/S FUSION MAN POWER AND INFRA SERVICES TRICHY. | 1,38,52,800/ | 1,38,23,040/ | (-) 0.21% குறைவு |
| 2 | M/S VANNAM CONTRACT PHASE-I TRICHY | | 1,39,37,040/ | (+) 0.61% கூடுதல் |

**அலுவலகக்குறிப்பு**

1) மேற்படி ஒப்பந்தப்புள்ளி விலை விகிதப் பட்டியலின் படி மதிப்பிட்டை விட (-) 0.21% குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கிய **M/S FUSION MAN POWER AND INFRA SERVICES NO 21/71 CHETTIYAPATTI EDAMALAI PATTI PUDUR NAGAMANGALAM TRICHY TAMILADU 620012** என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.

2) மேற்காணும் பணிகளுக்கான செலவினம் ரூ 1,38,23,040/ ஐ நகராட்சி பொதுநிதிலிருந்து செலவு மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்**: 460 - அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.25**

இந்நகராட்சி பகுதியில் இயங்கி வரும் நகராட்சி மற்றும் அரசு பள்ளிகளில் உள்ள கழிப்பறைகள் மற்றும் பள்ளி வளாகத்தில் தூய்மை பணிகள் செய்ய ஒப்பந்த முறையில் 7 பணியாளர்கள் ஈடுபடுத்தப்படுவதற்கு கடந்த 26.10.2023 அன்று புதிதாக ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்புநோக்கு செய்து மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை (ரு) | ஒப்பந்தப்புள்ளி கோரிய தொகை (ரூ) | மதிப்பீட்டை விட கூடுதல் / குறைவு |
|---|---|---|---|---|
| 1 | Sangar Engineering | 16,66,000/- | 1528800/- | 8.14 % **குறைவு** |
| 2 | Saram enviro services pvt ltd | | 1638000/- | 1.57 % **குறைவு** |

**அலுவலகக்குறிப்பு:** மேற்படி ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதப் பட்டியலின் படி

மதிப்பிட்டை விட 8.14% குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கிய M/s Sangar Engineering என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி உத்தரவு வழங்கிட மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண்.26**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பொதுமக்களிடையே கசடு கழிவு மேலாண்மை குறித்தும் மனிதக்கழிவுகளை மனிதனே அகற்றுதல் தடை சட்டம் 2013 குறித்தும் பொது மக்கள் / வணிக நிறுவனங்கள் போன்றவற்றிற்கு விழிப்புணர்வு ஏற்படுத்த தேவையான நோட்டீஸ்கள் மற்றும் ஸ்டிக்கர்கள் ஆகியவைகளை கொள்முதல் செய்து விநியோகம் செய்ய மன்ற அனுமதியும் அதற்கான உத்தேச செலவினம் ரூ5.00 /- இலட்சம் நகராட்சி பொதுநிதியில் செலவினம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | பொருட்கள் விபரம் | எண்ணம் |
|---|---|---|
| 1 | பொதுமக்களிடையே கசடு கழிவு மேலாண்மை குறித்தும் மனிதக்கழிவுகளை மனிதனே அகற்றுதல் தடை சட்டம் 2013 குறித்தும் , கட்டணமில்லா தொலைப்பேசி எண் 14420 குறித்தும் , விழிப்புணர்வு ஏற்படுத்திடும் வகையில் வீடுகள் மற்றும் வணிக நிறுவனங்களில் வண்ண சுவரொட்டிகள் | 20000 எண்ணம் |
| 2 | வீடுகள் , வணிக நிறுவனங்களில் குப்பைகளை தரம் பிரித்தல் குறித்தும் பிளாஸ்டிக் தடை குறித்த வண்ண சுவரொட்டிகள், | 10000 எண்ணம் |
| 3 | திடக்கழிவு மேலாண்மை குறித்த விழிப்புணர்வு வண்ண நோட்டீஸ்கள் | 10000 எண்ணம் |

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்**: 461 - அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.27**

அரசாணை எண் 37, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (ந.நி.3) துறை நாள்: 14.05.1999 படி, இந்நகராட்சியில் பணிபுரியும் அனைத்து பிரிவு சீருடை பணியாளர்களுக்கு 2023-2024 ஆம் ஆண்டிற்கு தீபாவளி பண்டிகையை முன்னிட்டு அரசு நிறுவனமான கோ ஆப்டெக்ஸ் , நிறுவனத்தில் சீருடைகள் வாங்கி வழங்கவும், சீருடைகள் தைப்பதற்கான கூலி வழங்கவும் அதற்கான உத்தேச செலவினத் தொகைரூ2.00/- இலட்சம் ஆகும். இச்செலவினத்தை

இந்நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

__அலுவலககுறிப்பு :__ மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்**: 463 - அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.28**

இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் பயன்படுத்தப்பட்டு வரும் இலகுரக வாகனங்களில் (LCV) பொதுமக்களுக்கு குப்பைகளையும் பிரிப்பது குறித்தும் குப்பைகளை பொது இடங்களில் கொட்டுவதைத் தடுத்திடும் வகையில் விழிப்புணர்வு தொடர்ந்து நாள் தோறும் ஏற்படுத்திட முதற்கட்டமாக **10** வாகனங்களில் ஒலி பெருக்கி சாதனங்களை கொள்முதல் செய்ய உத்தேச செலவினம் ரூ **60000/–** ஐ நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள நகர்மன்ற தீர்மனம் எண் **378** நாள் **27.07.2023** ன் படி அனுமதி பெற்று **18.08.2023** ஆம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்புநோக்கு செய்து மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| **வ.எண்** | **பொருட்களின் விபரம்** | **இசையா அசோசியேட்ஸ் பழைய வத்தலக்குண்டு திண்டுக்கல் DT pin Code 624202** | **ரத்னா ஏஜென்சிஸ் 30, 100 Feet Road., Gandhi Puram Coimbtore** |
|---|---|---|---|
| 1 | வாகன ஒலி பெருக்கி சாதனம் | ரூ 50,000+GST18% | ரூ 55,000+ GST18% |

__அலுவலகக்குறிப்பு :__ வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய இசையா அசோசியேட்ஸ் திண்டுக்கல் மாவட்டம் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்**: 464 - அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.29**

இந்நகராட்சி பகுதியில் **12.10.2023** அன்று ஆய்வு செய்த மாவட்ட ஆட்சி தலைவர் அவர்கள் **10**ம் பகுதி நகராட்சி ஆரம்ப பள்ளி வளாகத்தினுள் உள்ள **பழைய** பழுதடைந்த அங்கன்வாடி மையம் மற்றும் குழந்தைகள் கழிப்பிடத்தை இடித்து அப்புறப்படுத்திட உத்திரவிட்டுள்ளார்கள். மேலும் தற்பொழுது மழை காலமாக இருப்பதால் இந்நகராட்சி பகுதியில் பழுதடைந்த கட்டிடங்களை கண்டறிந்து இடித்து அப்புறப்படுத்திட அறிவுரை

வழங்கியதை தொடர்ந்து ஆய்வு செய்யப்பட்டதில் கீழ்கண்ட கழிப்பிடங்கள் மிகவும் பழுதடைந்து உள்ளதால் பழுதடைந்த அங்கன்வாடி மையம் மற்றும் கழிப்பிடங்களை இடித்து அப்புறப்படுத்த மன்ற அனுமதி கோரப்படுகிறது.

1. வார்டு எண் : 3 வடக்கு ராஜ வீதி கழிப்பிடம்

2. வார்டு எண் : 15 நகராட்சி பேட்டைத்தெரு கழிப்பிடம்

<u>அலுவலகக்குறிப்பு</u>:- அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்**: 465- அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.30**

தமிழக அரசின் உத்திரவின் படி முத்தமிழறிஞர் டாக்டர். கலைஞர் மு.கருணாநிதி அவர்களின் நூற்றாண்டு கொண்டாட்டங்கள் 2023 ஜீன் திங்கள் முதல் 2024 ஜீன் திங்கள் வரை நடைபெறுவதை முன்னிட்டு நகர்புற உள்ளாட்சி அமைப்புகளில் கீழ்க்கண்ட பணிகள் செய்ய நகராட்சி நிர்வாக இயக்குநர், அவர்கள் சுற்றறிக்கை ந.க.எண்.16387/எம்2/2023 நாள் 19.10.2023ன் படி உத்திரவிட்டுள்ளதால் இந்நகராட்சியில் கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்ளவும் அதற்கான செலவினத்தை பொது நிதிகளில் இருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<table>
<tr><th>வ.எண்</th><th>பணியின் பெயர்</th><th>மதிப்பீடு ரூ (இலட்சத்தில்)</th></tr>
<tr><td rowspan="3">1</td><td>அ) பொது சுகாதார துறையின் மூலம் மாவட்ட ஆட்சி தலைவர் அவர்களின் தலைமையில் ஒரு மருத்துவ முகாம் நடத்துதல்</td><td rowspan="3">3.00/-</td></tr>
<tr><td>ஆ) நகராட்சி பகுதியில் ஒரு அடர்வனம் உருவாக்குதல்</td></tr>
<tr><td>இ) நகர்பகுதியில் தலா 10,000 மரக்கன்றுகள் நடுதல்</td></tr>
<tr><td>2</td><td>இந்நகராட்சி 10ஆம் பகுதி உயர்நிலைப்பள்ளியில் ஒரு Smart Class room அமைத்தல்</td><td>10.00/-</td></tr>
</table>

<u>அலுவலகக்குறிப்பு</u>:- அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்**: 466 - அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.31**

இந்நகராட்சியில் கீழ்கண்ட இடங்களில் ஜெனரேட்டர்கள் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1. | நகராட்சி அலுவலகம் | 1 எண்ணம் | 35 KVA |
| 2. | பாதாள சாக்கடை சுத்திகரிப்பு நிலையம்(STP) | 1 எண்ணம் | 350 KVA |
| 3. | பாதாள சாக்கடை பம்பிங் ஸ்டேசன்கள் | 2 எண்ணம் | 150 KVA,125KVA |
| 4. | நகராட்சி குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் | 1 எண்ணம் | 35 KVA |

மேற்கண்ட ஜெனரேட்டர்கள் ஆண்டு பராமரிப்பு செய்யவும் அதற்க்கான உத்தேச செலவினம் ரூ.4.00/- இலட்சத்தினை குடிநீர் வழங்கல் நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி கோரப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:- அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்**: 467 - அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.32**

போடிநாயக்கனூர் நகர்மன்ற தலைவர் அறையில் புதிய 1.50 டன் ஏர் கண்டிஸ்னர் இயந்திரம் வாங்கி பொருத்தவும். அதற்கான உத்தேச செலவினம் ரூ 60000/- ஐ பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**:- அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்**: 468 - அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.33**

போடிநாயக்கனூர் நகராட்சி அலுவலக வளாகத்தில் உள்ள 9 ஏர் கண்டிஸ்னர் இயந்திரங்களை ஆண்டு பராமரிப்பு செய்வதற்க்கும் அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.50,000/- ஐ பொதுநிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**:- அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்**: 468A - அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.34**

இந்நகராட்சி அலுவலக பயன்பாட்டிற்கு கூடுதலாக 2 எண்ணம் ஐ5 12th Generation Computer (All in one) மற்றும் கலர் பிரிண்டர் 1 எண்ணம் மற்றும் Laser பிரிண்டர்கள் 5 எண்ணம் விநியோகம் செய்யும் பணிக்கு 20.09.2023ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற மூன்று ஒப்பந்தபுள்ளிகள் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

1. மெர்குரி சாப்ட்வேர், பெரியகுளம்

2. சுவதா சிஸ்டம்ஸ், பெரியகுளம்

3. ஸ்ரீ எம்.எ.கே **பெரி**பரல்ஸ்

வரப்பெற்ற மூன்று ஒப்பந்தப்புள்ளியில், தகுதியான இரண்டு ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது

| வ.எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டை விட கூடுதல்/ குறைவு |
|---|---|---|---|---|
| 1 | போடிநாயக்கனூர் நகராட்சி அலுவலக பயன்பாட்டிற்கு கூடுதலாக 2 எண்ணம் ஐ5 12th Generation Computer (All in one) மற்றும் கலர் பிரிண்டர் 1 எண்ணம் மற்றும் Laser பிரிண்டர்கள் 5 எண்ணம் விநியோகம் செய்யும் பணி | ரூ.3,00,000/- | மெர்குரி சாப்ட்வேர், பெரியகுளம் | 2.25% குறைவு |
| | | | சுவதா சிஸ்டம்ஸ், பெரியகுளம் | 1.02% குறைவு |

**அலுவலகக்குறிப்பு**:-

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள மெர்குரி சாப்ட்வேர், பெரியகுளம் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலை உத்தரவு வழங்கவும், பணிகள் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 2882/2023/இ1)

**தீர்மான எண்**: 469 - அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.35**

போடிநாயக்கனூர் நகராட்சி அலுவலகத்தில் உள்ள தானியங்கியை (LIFT) தனியார் நிறுவனம் மூலம் வருடாந்திர பராமரிப்பு (AMC) செய்வதற்க்கும், அதற்கான உத்தேச செலவினம் ரூ75,000/-ஐ பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும், அதற்கு உள்ளூர் விலைப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

1. எஸ். எம். எஸ். எலிவேட்டர் கம்பெனி, மதுரை - ரூ5000/+GST18% / ஒரு மாதத்திற்கு

2. சி.எம்.சி எலிவேட்டர்ஸ் கம்பெனி, சென்னை - ரூ 5750/+GST18% / ஒரு மாதத்திற்கு

<u>**அலுவலகக்குறிப்பு**</u>:- 1. **அனுமதிக்கலாம்**.

2.. குறைந்த விலைபுள்ளி கோரியுள்ள எஸ். எம். எஸ். எலிவேட்டர் கம்பெனி, மதுரை விலைப்புள்ளியை ஏற்கலாம்.

**தீர்மான எண்**: 470 - அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.36**

போடிநாயக்கனூர் நகராட்சி வார்டு எண். 27 சுந்தரமகாலிங்கம் லே-அவுட்டல் பொதுநிதியின் கீழ் ரூ.5.00/- இலட்டசம் மதிப்பீட்டில் மழைநீர் கட்டுவதற்கு மன்ற அனுமதி கோருப்படுகிறது.

<u>**அலுவலகக்குறிப்பு**</u> :- **மன்றம் அனுமதிக்கலாம்**.

**தீர்மான எண்**: 471 - அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.37**

போடிநாயக்கனூர் உள்ளூர் திட்டக் குழுமம் எல்லைக்குட்பட்ட சர்வே வார்டு.**II**, பிளாக்.**4**, நகரளவு எண். **187/3**, **187/8**, மற்றும் **187/9** ( பழைய நகரளவு எண். **187/1**பகுதி, **187/2**பகுதி )இல் **6900.00** ச.மீ பரப்பளவு இடத்திற்கு திரு.V.கனகராஜ் மற்றும் திரு.R.அசோக்குமார் என்பவர் மனைப்பிரிவு அனுமதி கோரியுள்ளார். மேற்படி குடியிருப்பு மனைப்பிரிவுக்கு நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் தேனி மாவட்டம் அவர்களது கடித ந.க.எண். THENI/4OQ19ZY0/2023/2023/TCP நாள்.**11.10.2023** சாலை அமைப்பு வரைபடம் வழங்கப்பட்டததின்படி சாலைகள், மூலைமுடுக்குகள், உள்ளாட்சி உபயோக இடங்களை நகராட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டதனை தொடர்ந்து மனைப்பிரிவு வரைபடத்திற்கு L.P/AD DTCP(TD) NO: SWP/110/2023 என எண்ணிடப்பட்டு தொழில் நுட்ப அனுமதியும் திட்ட அனுமதியும் நிபந்தனைகள் மற்றும் சிறப்பு நிபந்தனைகளுடன் ஒப்புதல் வழங்கியுள்ளார்கள்.

ஆதலால், மனுதாரர் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநரது **11.10.2023**–ஆம் தேதிய கடிதத்தின்படி சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடு ஆகியவற்றினை நகராட்சிக்கு தானப்பத்திரம்

எண்.5383/2023 நாள்.16.09.2023–இல் பத்திரப்பதிவு செய்து அசல் ஆவணம் நகராட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.

எனவே மனுதாரரால் தானமாக வழங்கப்பட்ட சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடு இடங்களை நகராட்சி பராமரிப்பிற்கு எடுத்துக்கொள்ள மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:** மன்றம் பதிவு செய்யலாம்.

**தீர்மான எண்**: 472 - மன்றத்தால் பதிவு செய்யப்பட்டது.

**பொருள் எண்.38**

போடிநாயக்கனூர் உள்ளூர் திட்டக் குழுமம் எல்லைக்குட்பட்ட சர்வே வார்டு.II, பிளாக்.4, நகரளவு எண். 187/2 மற்றும் 187/4 ( பழைய நகரளவு எண். 187/1 பகுதி, மற்றும் 187/2 பகுதி)–இல் 3881.30 ச.மீ பரப்பளவு இடத்திற்கு திரு.S.தரணீதரன் என்பவர் மனைப்பிரிவு அனுமதி கோரியுள்ளார். மேற்படி குடியிருப்பு மனைப்பிரிவுக்கு நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் தேனி மாவட்டம் அவர்களது கடித ந.க.எண். THENI/RCMSOTYX/2023/2023/TCP நாள்.11.10.2023 சாலை அமைப்பு வரைபடம் வழங்கப்பட்டததின்படி சாலைகள், மூலைமுடுக்குகள், உள்ளாட்சி உபயோக இடங்களை நகராட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டதனை தொடர்ந்து மனைப்பிரிவு வரைபடத்திற்கு L.P/AD DTCP(TD) NO: SWP/108/2023 என எண்ணிடப்பட்டு தொழில் நுட்ப அனுமதியும் திட்ட அனுமதியும் நிபந்தனைகள் மற்றும் சிறப்பு நிபந்தனைகளுடன் ஒப்புதல் வழங்கியுள்ளார்கள்.

எனவே, மனுதாரர் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநரது 11.10.2023–ஆம் தேதிய கடிதத்தின்படி சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடு ஆகியவற்றினை நகராட்சிக்கு தானப்பத்திரம் எண்.5630/2023 நாள்.28.09.2023–இல் பத்திரப்பதிவு செய்து அசல் ஆவணம் நகராட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.

எனவே மனுதாரரால் தானமாக வழங்கப்பட்ட சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடு இடங்களை நகராட்சி பராமரிப்பிற்கு எடுத்துக்கொள்ள மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:** மன்றம் பதிவு செய்யலாம்.

**ந.க.எண்**.3287/2023/**எப்**1

**தீர்மான எண்**: 473 - பதிவு செய்யப்பட்டது.

**பொருள் எண்.39**

இந்நகராட்சியில் நகர்ப்புற வீடற்றோருக்கான தங்கும் விடுதி அரசு மருத்துவமனையில் NULM Centre கட்டிடம் கட்ட 2016-2017-ம் ஆண்டில் நிதி ஒதுக்கப்பட்டு கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டது. அரசு மருத்துவமனை வளாகத்தினுள் செயல்பட்டுவரும் நகர்புற வீடற்றோருக்கான தங்கும் விடுதிக்கு நிர்வாக செலவின தொகை (O&M Cost) நகராட்சி நிர்வாக ஆணையரால் அனுமதிக்கப்பட்டுள்ளது.

மேற்படி NULM Centre கட்டிடத்தில், அரசு மருத்துவமனைக்கு பிரசவத்திற்கு வரும் கர்பினிகள், உள் மற்றும் பிற நோயாளிகளை கவனித்துக் கொள்ளும் உறவினர்கள் தங்க நகர்மன்றத்தால் குறைந்தபட்ச ஒருநாள் கட்டணத் தொகையினை நிர்ணயம் செய்து அத்

தொகையை கட்டணமாக பெற்றுக்கொண்டு தங்கவைக்க பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்பது அரசு நிபந்தனைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நகராட்சியில் அரசு மருத்துவமனையில் NULM Centre கடந்த 2019-ம் ஆண்டு வரை நல்ல முறையில் செயல்பட்டு வந்தது. கொரோணா நோய் தொற்று காரணமாக மருத்துவ மனைக்கு போதிய இடம் வசதி இல்லாத காரணத்தால், மக்களின் நலனுக்காக அவசர அவசியம் கருதி மேற்படி வீடற்றோருக்கான தங்கும் விடுதியானது கொரொணா சிகிச்சை மையமாக பயன்படுத்தப்பட்டு வந்தது.

கொரொணா காலங்கள் முடிந்து தற்போது, இந்நகராட்சிக்கு சொந்தமான (NULM) நகர்புற வீடற்றோர் தங்கும் விடுதியினை இந்நகராட்சிக்கு ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது, மேற்படி நகர்புற வீடற்றோர் தங்கும் விடுதியினை NGO மூலம் பராமரிக்கப்பட வேண்டும் என நகராட்சி நிர்வாக ஆனையர் அவர்களின் Roc No: 17213/2019/ UPA1, நாள் 26.07.2019-ல் தெரிவித்துள்ளார். மேலும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அவர்களின் கடிதம் ந.க.எண்.5291/2023/பி2 நாள்.17.10.2023-ன்படி, சுரபி அறக்கட்டளை மதுரை என்பவர் மூலம் பராமரிக்கலாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. எனவே அரசு மருத்துவமணையில் உள்ள நகர்புற வீடற்றோருக்கான தங்கும் விடுதி NULM மையத்தை மேற்கண்ட சுரபி அறக்கட்டளை என்ற நிறுவனத்தின் மூலம் பராமரிப்பு பணியினை மேற்கொள்ளவும், இத்தொண்டு நிறுவனத்திற்கு 2023-2024 ஆண்டிற்குண்டான பணி உத்தரவு வழங்கவும், மேற்படி விடுதியினை நடத்த தேவையான நிர்வாக செலவினங்களில் 50 சதவீதம் Day NULM மூலமும் மற்றும் 50 சதவீதம் பொது நிதியின் மூலம் மேற்கொள்ளவும், விடுதியில் தங்கும் நபர்களுக்கு நாள் ஒன்றிற்கு நபர் ஒருவருக்கு ரூ.20/- வசூலித்துக்கொள்ளவும், மாதாந்திர பராமரிப்பு செலவிற்காக ரூ.40,000/- வழங்கவும், மேற்படி சுரபி அறக்கட்டளை நிறுவனத்திற்கு அனுமதி அளிக்க மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**- மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**தீர்மான எண்**: 474 - அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.40**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள கழிப்பிடங்களை தற்போது, பராமரித்து வரும் அமைப்புகளிலிருந்து (பொது ஏலம் விடப்பட்ட கழிப்பிடங்கள் தவிர்த்து) சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளை வழக்கு எண்.13684 தீர்பாணை நாள். 12.06.2023-இன்படி நகராட்சி கையகப்படுத்த மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**- மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்**.4530/2017/அ1

**தீர்மான எண்**: 475 - அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

(ஒம்) திருமதி ச.ராஜராஜேஸ்வரி

நகர்மன்ற தலைவர்

போடிநாயக்கனூர்

//**உண்மை நகல்**//

ஆணையாளர்

போடிநாயக்கனூர்